IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# கணினி உதவியுடன் திருக்குறளில் வேற்றுமைகள் - ஓர் ஆய்வு



**முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர்**
முதல்வர்,
சி.கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி,
அண்ணாநகர் கிழக்கு,
சென்னை-102.

உலகில் கிரேக்க நாட்டில் தான் தொன்மையான இலக்கணம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது. ஆனால் இலக்கணம் தோன்றுவதற்கு முன்பே இலக்கண ஆய்வும் பல்வேறு இலக்கணக் கூறுகளாகக் கொண்ட ஆய்வுகளும் தோன்றின. பித்தாகோரஸ் (கி.மு. 5 ஆம் நூற்றாண்டு) ஹெரோகிளிட்டஸ், பிளோட்டோ (422-348) பலர் இலக்கண தொடர்பான செய்திகளைக் கூறியுள்ளார்.

தமிழின் முதல் இலக்கணம் தொல்காப்பியம். தமிழ் மொழிகளில் தனித்த அமைப்பை விளக்கவே தொல்காப்பியம் இயற்றப்பட்டது. தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருள் என 1611 நூற்பாக்கள் உள்ளன. இந்நூல் தமிழ் மொழியின் இயல்புகளையும், தமிழ் இலக்கியத்தின் இலக்கியங்களையும் ஆராய்ந்து, மொழி இலக்கிய வளர்ச்சியின் நிலைகளை ஆராய்ந்து உருவாக்கப்பட்டது. தொன்மைத் தமிழுக்கான மிகச் சிறந்த ஆய்வாகவும் இது விளங்குகிறது,

தொல்காப்பியத்தில் சொல்லதிகாரத்தில் கூறப்பட்டுள்ள ஒன்பது இயல்களில், நான்கு இயல்களில் தொல்காப்பியர் வேற்றுமை குறித்து இயல்களை அமைக்கிறார். மொழிக்கு வேற்றுமை என்ற இலக்கணக் கூறு இன்றியமையாதது என்கிறார்.

இவ்வாய்வுக் கட்டுரையில் தொல்காப்பிய வேற்றுமை இலக்கண விதிகளை அடிப்படையாகக் கொண்டு, திருக்குறளின் வேற்றுமைகளைக் கணினி உதவியுடன் ஆராய்ந்து அரிய செய்திகளை வழங்குவதே கட்டுரையின் நோக்கம். பைதான் என்ற செயற்கை மொழியின் வழியாகக் கணினி மொழிகளில் இலக்கண ஆய்வுக்கு ஏற்ற மொழியாக கருதப்படும், கணினி நிரலாளர்கள் உதவியுடன் பைதான் என்ற இவ்வாய்வை நிகழ்த்த முயன்றுள்ளோம். இவ்வாய்வு இத்துறையின் முதல் முயற்சி.

ஒரு மொழியின் அடிப்படை அலகுகள் இரண்டு என மொழியியலார் குறிப்பார். 1. பெயர் 2. வினை. இந்த பெயரும் வினையும் இல்லாமல் எந்த மொழியும் இல்லை. பெயரும் வினையும் தன்னிலிருந்து திரிந்து பொருளை வேறுபடுத்துகின்றன. பெயரோடு இணைந்து பொருளினை வேறுபடுத்துவது கலந்து வேற்றுமை எனப்படும். பெயரும் வினையும் மட்டும் ஒரு தொடராக முடியாது. வேற்றுமை போன்ற இலக்கணக் கூறுகள்தான் இலக்கணத் தொடர் பொருளை உணர்த்துகின்றன.

தொல்காப்பியம் வேற்றுமைக்கும் நேரடியாக வினைக்கும் இலக்கணம் கூறவில்லை. வேற்றுமை ஏழு என்று சொல்லிலிட்டு விளி வேற்றுமையோடு எட்டு என்கின்றார். வேற்றுமை ஏழு என்று கருத்துடையவர்கள் உள்ளார்கள். ஆனால், கருத்து விளியோடு, எட்டு என்று கூறி அதற்காக விளி மரபு என தனி இயலை அமைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவைதாம்

பெயர் ஐ ஓடு, கு, இன், அது, கண் விளியென்ற ஈற்ற என பெயர் ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி எட்டு வேற்றுமைகளை தனித் தனியாகப் பிரித்து கூறுவது கணினி நிரலாளர்கள் எளிமையாக நிரல்படுத்த மொழி நிரல்படுத்த பெரிதும் உதவும்.

சாத்தன், சாத்தானை, சாத்தனொடு, சாத்திற்கு, சாத்தனின், சாத்தானது, சாத்தனதுகண், சாத்தா எனப்படும். பெயரோடு எட்டு வேற்றுமைகள் பொருள் வேறுபடுத்தப்படுகின்றது.

திருக்குறள் மேற்கண்ட வேற்றுமைகளைக் கண்டறிந்து திருக்குறளில் உயர்ந்த இலக்கிய உச்ச நிலைக்கு வேற்றுமைகள் எவ்வாறு உதவுகின்றன என கணினி வழி இவ்வாய்வை நிகழ்த்துவதற்குச் சில முன்னோடி முயற்சிகளை முன் வைக்கலாம். ஏனெனில் கணினி மொழியியல் துறையில், இலக்கண உருப்படுத்தி, கணினி உருவ நிகழ்த்தியர் பல பயனாளிகள்.

வேற்றுமை தொடர்பான சூத்திரங்களை விளக்கி கொள்வது முதல் பணி. சூத்திரங்களை எவ்வாறு கணினி மொழியாக மாற்றுவது இரண்டாம் பணி. அதன் வழி திருக்குறள் போன்ற தொன்மை இலக்கியங்களில் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன என்பதை ஆராய்வது போன்ற பணி, இந்த மூன்று பணிகளில் இவ்வாய்வு செல்கிறது,

வினை முற்றுக்கு இடது புறமாக வரும் வேற்றுமைகளை வாய் விட்டு முறையும், வகைப்பாட்டு என்ற முறையிலும், வகைப்படுத்தியுள்ளார் என்கிறார் (டாக்டர் பொற்கோ, 2001) உருபு அடிப்படையிலும் எண்ணுமுறை அடிப்படையிலும் தொல்காப்பியத்தைப் பயன்படுத்துகிறார்.

தமிழ் இலக்கண மரபு, தொல்காப்பிய மரபு, என்ற மரபுகளில் தொல்காப்பிய மரபு தமிழுக்கே உரிய தனித்துவமாகத் தெளிவான மரபாக முறையாக அமைந்துள்ளது. பகுதி, விகுதி, சந்தி, சாரியை, இடைநிலை, இடமிருந்து வலமாகத் தமிழ் இலக்கணச் சொல்

அமைகிறது, வேற்றுமையும் பொருந்தி ஈற்றில் வரும். வினைச் சொல்லின் வரைவிலக்கணம் பற்றிக் கூற வந்த தொல்காப்பியர் வேற்றுமை பற்றியும் குறிக்கிறார்.

**வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது**
**நினையுங் காலை காலமொடு தோன்றும்**

வினை வேற்றுமை ஏற்காது என்றும் ஆனால் பெயர் வேற்றுமை ஏற்கும். இந்த வரையறை கணினி விதியாகப் பற்றி நிரலாக்கம் செய்யப்பட வேண்டும்.

பெயர் வினை திருக்குறள் பெயருக்குப் பின்னால் வருகின்ற வேற்றுமைகள்

**இரண்டாம் வேற்றுமை**

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் (குறள்.448)

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் (குறள். 517)

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல் (குறள். 516)

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர் (குறள். 602)

**மூன்றாம் வேற்றுமை**

வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு (குறள். 552)

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை (குறள். 636)

நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்

பண்புபா ராட்டும் உலகு (குறள். 994)

பாலொடு தேன்கலந்து அற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர் (குறள். 1121)

உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு (குறள். 1122)

நாணொடு நல்லாண்மை பண்டு உடையேன் இன்று உடைவேன்
காமுற்றார் ஏறும் மடல் (குறள். 1133)

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்றும் புணை (குறள். 1134)

**நான்காம் வேற்றுமை**

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு (குறள். 231)

பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுஉலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிபு (குறள். 533)

அச்சம் உடையார்க்கு அரண்இல்லை ஆங்குஇல்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு
(குறள். 534)

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம் (குறள். 1120)

கருமணியின் பாவாய்நீ போதய்யாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம் (குறள். 1123)

**ஐந்தாம் வேற்றுமை**

இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துஉறும் போழ்து
(குறள். 539)

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியில் கலங்கிய மீன் (குறள். 1116)

கடல்அன்ன காமம் உழுந்தும் மடல்ஏறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல் (குறள். 1137)

யாம்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு (குறள். 1140)

**ஆறாம் வேற்றுமை**

உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளாப் பெறின் (குறள். 540)

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின் (குறள். 599)

**ஏழாம் வேற்றுமை**

மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறம்
ஆகுல நீர பிற (குறள் 34)

இல்லதுஎன் இல்லவள் மாண்புஆனால் உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை (குறள் 53)

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும் (குறள். 71)

உடைமையுள் இன்மை விருந்துஓம்பல் ஓம்பா

மடமை மடவார்கண் உண்டு
(குறள் 89)

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு (குறள். 107)

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு (குறள். 117)

அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு (குறள். 135)

பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்
(குறள். 141)

பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண்
(குறள். 146)

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும் (குறள். 176)

கண்டறிந்து அதற்குப் பொதுவிதி அமைக்க வேண்டும். இவ்வாறு செய்யும்பொழுது ஏற்படும் சிக்கல்களைக் கண்டறிந்து அதற்கான தீர்வுகளைக் கண்டறிய வேண்டும். எடுத்துக்காட்டாக, ஏழாம் வேற்றுமை கண் எனத் தொல்காப்பியம் காட்டுகின்றது. திருவள்ளுவர் நூற்றுக்கும் மேற்பட்ட குறள்களில் கண் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற (குறள் 34)

மனம் அத்து கண் இங்கு கண் என்பது ஏழாம் வேற்றுமை உருபு.

கண்ணொடு கண்இறை நோக்குகாநம வாய்ச் சொற்கள்

என்ன பயன் இல (குறள். 1100)

கண் ஒடு, ஒடு மூன்றாம் வேற்றுமை "கண்" என்ற சொல் வேற்றுமையால் வருகிறது. கண்கள் என்ற நேரப் பொருள் தந்து ஒடு என்ற வேற்றுமை போல் வருகிறது.

இந்தப் பொருண்மை வேறுபாட்டைக் கணிப்பொறிக்கு ஊட்டுவது மிகப்பெரும் சிக்கல். இதற்கென பைதான் கணினி மொழி பயன்படுத்த நிரலாக்க முயற்சி செய்யலாம். இது தொடக்க நிலை முயற்சி தான் அமையும். மொழிகளில் இலக்கண அறிஞரும் இணைந்து கூட்டாகச் செய்யப்பட வேண்டியது இது.

பார்வை நூல்கள்

1.டாக்டர் பொற்கோ, இக்காலத் தமிழ் இலக்கணம் , பாரிநிலையம், சென்னை,1995

2.தொல்காப்பியம், கழக வெளியீடு, சென்னை-18,1986.

3. திருக்குறள், சைவ சித்தாந்த நூற்பதிப்புகழகம், சென்னை-18,1985